தின கனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

Vol: 02 | Issue: 242 | 4 Pages | 30.3.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 242 | 4 பக்கங்கள் | 30.3.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்**

**மருளானாம் மாணாப் பிறப்பு**

**விளக்கம்:**
**மெய்ப்பொருள் அல்லாதவைகளை மெய்ப்பொருள்என்றுதவறாகஉணர்கின்ற மயக்க உணர்வால் சிறப்பில்லாத துன்பப் பிறவி உண்டாகும்.**


# தமிழக அரசியலில் 2ம் இடத்திற்குதான் போட்டி: முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின்

சென்னை, மார்ச்.30

சென்னையில் நடைபெற்ற ரம்ஜான் விழாவில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டுபேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:

தமிழக அரசியலில் 2ஆம் இடத்திற்குதான்போட்டி உள்ளது. முதலிடத்தில் திமுக உள்ளது. எடப்பாடி பழனிசாமி கார் மாறி மாறி போனதை அவைக்குறிப்பில் இருந்து நீக்குங்கள் என்றனர் அதிமுகவினர்.



அந்த அளவிற்கு அஞ்சிநடுங்கும் எதிர்க்கட்சியாக அதிமுக இருக்கிறது. ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சிறுபான்மை மக்களுக்கு எப்போதும் திமுக பாடுபட்டு வருகிறது. இஸ்லாமியர்களையும் திமுகவையும் யாராலும் பிரிக்க முடியாது. இஸ்லாமியர்களுக்கு எதிராக எது நடந்தாலும் முதலில் கொடுப்பது திமுகதான். வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவை எதிர்த்து தனித்தீர்மானம் கொண்டு வந்துள்ளோம்" என்றார்.

## சிரியா, லெபனான் இடையே எல்லை வரையறை தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்து



பெய்ரூட், மார்ச்.30

சிரியாவில் 54 ஆண்டு கால ஆசாத் குடும்ப ஆட்சி, கடந்த டிசம்பர் மாதம் முடிவுக்கு வந்தது. முன்னதாக சிரியாவில் சுமார் 14 ஆண்டுகள் நீடித்த உள்நாட்டுப் போரில், லெபனானைச் சேர்ந்த ஹிஸ்புல்லா அமைப்பினர்,சிரியாவின் ஆசாத் அரசாங்கத்துடன் இணைந்து போரிட்டு வந்தனர்.

ஈரானின் ஆதரவுடன் லெபனானில் இயங்கி வரும் ஹிஸ்புல்லா அமைப்பினர், இஸ்ரேல் காசா போரில் காசாவிற்கு ஆதரவு தெரிவித்து இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடியாகலெபனானில்இஸ்ரேல்அதிரடிதாக்குதல்களைநடத்தியது.

இந்த மோதல் காரணமாக ஹிஸ்புல்லா அமைப்பு தற்போது பலவீனமடைந்து இருப்பதாக கூறப்படுகிறது. இதற்கிடையில், லெபனான்சிரியா எல்லைப் பகுதியில் பதற்றம் அதிகரித்துள்ளது. சமீபத்தில் ஹிஸ்புல்லா அமைப்பினர் சிலர் எல்லை தாண்டி வந்து, தங்கள் நாட்டை சேர்ந்த 3 ராணுவ வீரர்களை கடத்திச் சென்று கொலை செய்ததாக சிரியாவின் இடைக்கால அரசாங்கம் குற்றம் சாட்டியது.

இந்த குற்றச்சாட்டுக்கு மறுப்பு தெரிவித்த ஹிஸ்புல்லா அமைப்பு, கொல்லப்பட்ட3பேரும்சட்டவிரோதகடத்தல்கும்பலைசேர்ந்தவர்கள் என்று கூறியது. அதே சமயம், லெபனானை சேர்ந்த 7 பேர் சிரியாவால் கொலை செய்யப்பட்டதாகவும், 52 பேர் படுகாயமடைந்ததாகவும் ஹிஸ்புல்லா தரப்பு குற்றம் சாட்டியிருந்தது.

இந்த சூழலில், லெபனான்சிரியா எல்லையில் பதற்றத்தை தணிக்கும் முயற்சிகள் இருநாட்டு அரசுகள் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக சவுதி அரேபியாவின் ஜிட்டா நகரில் நடந்த பேச்சுவார்த்தையில் லெபனானின் பாதுகாப்புத்துறை மந்திரி மெனாசா மற்றும் சிரியாவின் பாதுகாப்புத்துறை மந்திரி அபு காஸ்ரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த பேச்சுவார்த்தையின்போது சிரியா, லெபனான் இடையே எல்லை வரையறை தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் மூலம் லெபனான்சிரியா எல்லையில் நிலவி வரும் பதற்றம் சற்று தணியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆஸ்திரேலியாவில் மே 3ந்தேதி பொதுத்தேர்தல்: ஆளும் கட்சிக்கு கடும் சவால்



சிட்னி, மார்ச்.30

ஆஸ்திரேலியாவில்பிரதமர்அந்தோணிஅல்பனீஸ்தலைமையிலான தொழிலாளர் கட்சி ஆட்சி செய்து வருகிறது. இந்நிலையில், ஆஸ்திரேலியாவில் வரும் மே மாதம் 3ந்தேதி பொதுத்தேர்தல் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஆஸ்திரேலியாவின் கவர்னர் சாம் மாஸ்டினை பிரதமர் அந்தோணி அல்பனீஸ் நேரில் சென்று சந்தித்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், தேர்தல் தேதி தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார்.

இந்த பொதுத்தேர்தல் ஆஸ்திரேலியாவின் ஆளும் கட்சியான தொழிலாளர் கட்சிக்கு கடும் சவாலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆஸ்திரேலியாவில் நிலவி வரும் விலைவாசி உயர்வு மற்றும் வீட்டுவசதி பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகள் ஆளும் கட்சிக்கான ஆதரவை பாதிக்கும் என கூறப்படுகிறது.

முன்னதாக பிரதமர் அந்தோணி அல்பனீஸ், வீட்டுவசதி பற்றாக்குறையை சமாளிக்க அடுத்த 5 ஆண்டுகளில் 12 லட்சம் வீடுகள் கட்டப்படும் என கடந்த 2023ம் ஆண்டு உறுதியளித்தார். ஆனால் அது தொடர்பான நடவடிக்கைகள் வேகமாக மேற்கொள்ளப்படவில்லை.

இதற்கிடையில், எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி கூட்டணிக்கு ஆதரவு அதிகரித்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த 2022 தேர்தலில் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சியை ஆதரிக்காத 19 எம்.பி.க்கள் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்திற்கு தேர்வாகினர். இந்நிலையில், இந்த ஆண்டு பொதுத்தேர்தல் முடிவுகளை தீர்மானிப்பதில் அணிசேரா எம்.பி.க்கள் முக்கிய பக்கு வகிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் புல சித்த மருத்துவத்துறை சார்பில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் புல சித்த மருத்துவத்துறை சார்பில் "இந்திய அறிவுசார் அமைப்பியல் வரலாற்றில் தமிழ் மருத்துவத் தடயங்கள் என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு வெகு விமர்சையாக நடைபெற்றது.

விழாவில்துணைவேந்தர்பொறுப்பு குழு உறுப்பினர்கள்,மரு. முனைவர்,பெ. பாரதஜோதி , முனைவர்.சி. அமுதா ஆகியோர் தலைமை தாங்கினார். பதிவாளர் பொறுப்பு கோ.பன்னீர்செல்வம் வாழ்த்துரை ஆற்றினார்.

தொடர்ந்து வாழ்த்துரை வழங்கிய மொழிபெயர்ப்புத்துறை இணைப் பேராசிரியர், முனை. சௌ.வீரலக்ஷ்மி கூறியதாவது தமிழ் மருத்துவ தொன்மையைப் பற்றியும் 'சுளுந்தீ' நாவல் குறித்தும் அதில் கூறப்பட்டுள்ள. பண்டுவ முறைகள் குறித்தும் மாணவ மாணவிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் ஆட்சிக்குழு உறுப்பினர், பேரா. முனை. ரெ. நீலகண்டன் இந்திய அறிவுசார் அமைப்பியலின் வரலாறு மற்றும் கருத்தாக்கம் குறித்துத் தலைமை உரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராக திருச்சி,புனித சிலுவை கல்லூரி, ,வரலாற்றுத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் .செ.ப.தர்சனா,கூறியதாவது இந்திய அறிவுசார் அமைப்பியல் அறிமுகம் மற்றும் வரலாற்றில் தமிழ் மருத்துவத் தடயங்கள் எனும் பொருண்மையில் பழைய கற்கால ஆதாரங்கள், மண்டையோட்டில் துளைகள் இட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டதற்கான அகழ்வாராய்ச்சி தரவுகள், மருத்துவர்களுக்கும், செவிலியர்களு க்கும், இடமளிக்கப்பட்ட செய்தி மற்றும் மருத்துவம் பார்க்கப்பட்ட ஆதுரசாலைகள் குறித்த திருமுக்கூ டல் கல்வெட்டுகள், உணவு மற்றும் நலம் குறித்த இலக்கிய தரவுகள் அடங்கிய செறிவான பொழிவுரை வழங்கினார்.



முன்னதாக நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்மரு.து.மாண்டெலாவரவேற்று பேசியதாவது:

இந்திய அறிவுசார் அமைப்பியலில் தமிழ் நிலப்பரப்பின் அறிவியல் முன்னெடுப்புகள் தமிழ் மருத்துவத்தின் நிலை, மருந்து மற்றும் அழகுசாதானப் பொருட்கள் சட்டத்தில் தமிழ் மருத்துவ நூல்கள் அங்கீகரிப்பில் இன்றைய போக்கு மற்றும் தமிழ் மொழியைக் காத்து வளர்த்தலில் தமிழ் மருத்துவர்கள், தமிழறிஞர்கள் , வரலாற்றாய்வாளர்களின் பணி குறித்தும் கூறினார். நிறைவில் சித்த மருத்துவத்துறை உதவிப் பேராசிரியர் மரு.முனை.பழ. பாலசுப்பிரமணியன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் இலக்கியம், கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல், சிற்பத்துறை , கணினி அறிவியல் துறை, கல்வெட்டியல், தொல்லியல் துறை சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை நைனாங்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆண்டுவிழா

### தலைமை ஆசிரியை இந்திரா , ஆசிரியை பாக்யலெட்சுமி, பயிற்றுனர் செந்தில் பங்கேற்பு



சிவகங்கை வட்டம் அரசனி முத்துப்பட்டி அருகே உள்ள நைனாங்குளம் எனும் ஆதிதிராவிடர் சமூக கிராம மக்கள் பெரிதும் வசிக்கும் நைனாங்குளம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது..

இந்த பள்ளியின் ஆண்டுவிழா வருடாவருடம் சிறப்பாக நடைபெற்று வருவது வழக்கம் அந்த வகையில் இந்த வருடமும் ஆண்டு விழாவானது ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில் பயிலும் பள்ளிக்குழந்தைகளின் பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடைபெற்றது.

பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் சரண்யா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியை இந்திரா, பள்ளிவகுப்பு ஆசிரியைபாக்யலெட்சுமி, சிறப்புவிருந்தினராக ஆசிரியர் பயிற்றுனர் செந்தில் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

இந்த ஆண்டுவிழா நிகழ்ச்சியில் சமூக ஆர்வலர்கள் சரவணன், தீபா குமார், நாச்சி ஆத்தா உள்ளிட்ட பெற்றோர்கள், மற்றும் ஊர்பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிவசைலம் கிராமத்தில் உலக தண்ணீர் தினத்தினை முன்னிட்டு ஊராட்சிமன்ற தலைவர் தலைமையில் நடைபெற்ற கிராமசபைக்கூட்டம்

தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சிவசைலம் கிராமத்தில் உலக தண்ணீர் தினத்தினை முன்னிட்டுஊராட்சிமன்ற தலைவர் மலர்மதி தலைமையில் நடைபெற்ற கிராமசபைக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் ஏ.கே. கமல்கிஷோர். கலந்து கொண்டார்.



இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்ததாவது.

உலக தண்ணீர் தினத்தின் கருப்பொருளினை பற்றி விவாதித்தல், கிராமஊராட்சிநிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல் மற்றும் கிராம ஊராட்சியின் கடந்த ஆண்டு தணிக்கை அறிக்கை, சுத்தமான குடிநீர் விநியோகத்தினைஉறுதி செய்வது குறித்து விவாதித்தல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம். அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டம் II, தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம், தொழிலாளர் துறை, ஊரக வீடுகள் சீரமைத்தல் திட்டம் (2024, 2025), கலைஞரின் கனவு இல்லம் 2025 2026 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் பயனாளிகளை தேர்ந்தெடுத்தல், ஜல்ஜீவன் திட்டம், கிராம சபை கூட்டங்களில் கொத்தடிமை தொழிலாளர் நடைமுறைகளைஎதிர்த்துபோராடுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவ தற்கான வழிகாட்டுதல்கள். இதர பொருட்கள்போன்றதீர்மானங்கள் நிறைவேற்றப்ப ட்டன என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்தார். இக்கிராமசபைக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கோரிக்கை மேலும், அரசின் திட்டங்கள் மற்றும் சாலை வசதி, குடிநீர் வசதி, போக்குவரத்து வசதி போன்ற அடிப்படை வசதிகள் போன்றவை முறையாக கிடைக்கின்றதா 67 607 அப்பகுதியில் உள்ள பொது மக்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, தென்காசி மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின்சார்பில் தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களைபொது மக்கள்அறிந்திடும் வகையில் வைக்கப்பட்டுள்ள சாதனை விளக்க சிறு புகைப்படக்கண்காட்சியினை மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர். மற்றும் பொது மக்கள் பார்வையிட்டார்கள். புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டு அரசின் திட்டங்களை பற்றி பொது மக்கள் அறிந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி.அனிதா, கடையம் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் திரு. ஜான்பால், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.கண்ணன், திரு.ராமநாதன். வட்டாட்சியர் திரு. மணிகண்டன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு. ரா.ராமசுப்பிரமணியன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள். பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தினகனி




# காரைக்குடி குளோபல் மிசின் மற்றும் ஆராய்ச்சி மைய மருத்துவமனையில் காரைக்குடி ரோட்டரி, டயாலிசிஸ் சென்டர் திறப்பு விழா

சிவகங்கை, மார்ச்.30

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி குளோபல் மிசின் மற்றும் ஆராய்ச்சி மையமருத்துவமனையில் காரைக்குடி ரோட்டரி சங்க டயாலிசிஸ் சென்டர் திறப்பு விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கலந்து கொண்டு திறந்துவைத்தார். மேலும்




இந்நிகழ்ச்சியில் ரோட்டரி மாவட்ட ஆளுநர் மீரான் கான் சலீம், நன்கொடையாளர் வீர. நாராயணன், மாங்குடி எம்எல்ஏ,மருத்துவர் குமரேசன், விவேகானந்தன் மற்றும் ரோட்டரி சங்க தலைவர் லெட்சமணன், செயலாளர்அடைக்கப்பன்,பொருளாளர் பழனியப்பன் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# பெருமாநல்லூரில் கேரளாவை சேர்ந்த போலி பெண் மருத்துவர் கைது; மருத்துவமனைக்கு சீல்

திருப்பூர் மாவட்டம்: அவிநாசி: திருப்பூர் மாவட்ட ஊரக நலப்பணிகள் இயக்குநர் அலுவலகம்சார்பில்,தனியார்மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களில் தொடர் ஆய்வில் அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர்

அவிநாசி அருகே பெருமாநல்லூரை அடுத்துள்ள தட்டாங்குட்டையில், மருத்துவம் படிக்காமலேயே கிளினிக் வைத்து பெண் ஒருவர், கடந்த 8 மாதங்களாக மருத்துவம் பார்த்து வருவதாக மாவட்ட ஆட்சியர் தா. கிறிஸ்துராஜூக்கு புகார் சென்றது.




இதையடுத்து ஆட்சியரின் உத்தரவின்பேரில்,

திருப்பூர் மாவட்ட ஊரக நலப்பணிகள் இணை இயக்குநர் மீரா தலைமையிலான அதிகாரிகள் வெள்ளிக்கிழமை தட்டாங்குட்டையில் செயல்பட்டு வந்த கிளினிக் மற்றும் மருந்துக்கடையில் ஆய்வு செய்தனர். அங்கு நிம்மி (எ) நிம்மி ஏஜோஸ் (43) என்பவர் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்ததும், மருந்துச்சீட்டில் நிம்மி எம்பிபிஎஸ் எம்.டி., என குறிப்பிடப்பட்டிருந்ததும் தெரியவந்தது.

இதுகுறித்து, நிம்மி ஏஜோஸிடம் அதிகாரிகள் விசாரித்தனர்.

அவர், வைத்திருந்த மருத்துவப் படிப்புக்கான பட்டச்சான்றிதழ்கள் அனைத்தும் பல்வேறு மாநிலங்களில் போலியாக தயாரிக்கப்பட்டது தெரியவந்தது. தகவலின் பேரில் போலி மருத்துவர் நிம்மியை பெருமாநல்லூர் போலீஸார் கைது செய்தனர். தொடர்ந்து, கிளினிக், மருந்தகத்துக்கு ‘சீல்’ வைத்தனர்.

# மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் செயல்பட்டு வரும் அறநிலையத்துறை முதலுதவி சிகிச்சை மையம் பயனடைந்த பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சர்க்கு நன்றி



மதுரையில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் உலகப் புகழ்பெற்ற ஆன்மீகம் மற்றும் சுற்றுலா தலமாக திகழ்ந்து வருகிறது. இக்கோவிலில் ஆண்டு முழுவதும் திருவிழாக்கள் நடைபெறுவது சிறப்பு. இதனால் பல்வேறு பகுதிகளில் இருந்தும் நாள்தோறும் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வந்து செல்கின்றனர். தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் திருக்கோவிலுக்கு வருகை தரும் பக்தர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

திருக்கோவிலுக்கும் வரும் பக்தர்களில் முதியோர், பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட அனைவருக்கும் அவசரகால சூழ்நிலையை கருத்தில் கொண்டு மீனாட்சி அம்மன் கோவிலுக்கு என தனிப்பட்ட ஆம்புலன்ஸ் மற்றும் முதலுதவி மையம், நிரந்தர தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டும் என தமிழ்நாடுஅரசிற்குபொது மக்கள் மற்றும் பக்தர்கள் வலியுறுத்தி வந்தனர். இந்த கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்த தமிழ்நாடு அரசு முதற்கட்டமாக ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்தது. அதனைத் தொடர்ந்து, தீயணைப்பு நிலையம் அமைக்க உத்தரவிட்ட நிலையில், தற்போது கிழக்கு கோபுரம் பகுதியில் வருவாய்த் துறை அலுவலகம் அருகே தீயணைப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது.

மேலும், கடந்த 2022 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி மூலம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலுக்கு என பிரத்யேக முதலுதவி மையம் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டது. இதில் இதுவரை 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர். இதற்கு பக்தர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வரும் பக்தர்களில் மயக்கமடைவோருக்கு முதலுதவி அளித்து அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்ல ஆம்புலன்ஸ் மற்றும் 2 மருத்துவர்கள், 2 செவிலியர்கள், 2 மருத்துவ உதவியாளர்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். கோவில் திறந்திருக்கும் நேரம் முழுவதும் இந்த முதலுதவி மையத்தில் மருத்துவர்கள், செவிலியர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர். இங்கு போதுமான மாத்திரைகளும் உள்ளது. உடனுக்குடன் சிகிச்சை கிடைப்பதால், இந்த முதலுதவி சிகிச்சை மையத்திற்கு பக்தர்கள் மத்தியில் பெரும் வரவேற்வை பெற்றுள்ளது.

இது குறித்து கோவில் அதிகாரி தெரிவித்ததாவது:

கோவிலுக்கும் வரும் பக்தர்களின் ஆரோக்கியத்தை பேணும் வகையில், கடந்த 2022ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் தேதி முதலுதவி சிகிச்சை மையத்தை சென்னையில் நடந்த விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்கள். வருடம் முழுவதும் நடைபெறும் திருவிழாக்களால் பக்தர்களின் வருகை அதிகரித்துள்ளது. இதனால் பக்தர்கள் அவ்வப்போது உடல் நிலை பாதிக்கப்பட்டு முதலுதவி சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்று செல்கின்றனர்.

அந்த வகையில், கடந்த 2 வருடங்களில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு இந்த மையத்தில் முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. மண்டல இணை கமிஷனர் மற்றும் கோவில் இணை கமிஷனர் இணைந்து மையத்திற்கு தேவையான மாத்திரைகள் உள்ளிட்ட வசதிகளை செய்து கொடுக்கின்றனர். இந்த



ஆண்டு சித்திரை திருவிழா நடைபெறவுள்ளதால் தற்போது முதலாக இந்த மையத்தில் கூடுதல் வசதிகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்பதை கருத்திற்கொண்டு இம்மையத்தினை செயல்பாட்டுக்கு கொண்டு வந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கோவில் நிர்வாகத்தின் சார்பாகவும், பக்தர்களின் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**தொகுப்பு**
**இ.சாலி தளபதி**
**எம்.ஏ.,**
**செய்தி மக்கள்**
**தொடர்பு அலுவலர்,**
**மதுரை.**
**ம.கயிலைச் செல்வம்,**
**பி.இ.,**
**உதவி மக்கள்**
**தொடர்பு அலுவலர்**
**(செய்தி),**
**மதுரை.**

# சிறுநீரக திருட்டில் மருத்துவர்கள்.. விசாரணையை முடுக்கிய நீதிமன்றம்..!

சேலம், தர்மபுரி, ஈரோடு, நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் கடந்த 2011 முதல் 2013 வரையிலான காலத்தில் நூற்றுக்கணக்கான ஏழை மக்களிடம் சிறுநீரக திருட்டு நடைபெற்றதாக புகார் எழுந்தது. இந்த புகாரில் தர்மபுரி மாவட்ட குற்றப்பிரிவு காவல்துறை வழக்கு பதிவு செய்தது.

காவல்துறை விசாரணையில் அங்கு பத்துக்கும் மேற்பட்ட பிரபல தனியார் மருத்துவமனையில் பணியாற்றிய சிறுநீரக அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் வி.எம்.கணேசன் மற்றும் சில மருத்துவர்கள் இடைத் தரகர்கள் ஈடுபட்டது கண்டுபிடிக்கபட்டு கைது செய்யபட்டனர்.

இந்த வழக்கின் அடிப்படையில் அமலாக்கதுறை சட்ட விரோத பணப் பரி



வர்த்தனை வழக்கை கடந்த 2015 ஆம் ஆண்டு பதிவு செய்து. அமலாக்க துறை தனது குற்றபத்திரிகையில் டாக்டர்வி.எம்.கணேசன், அவரின் மனைவியும் டாக்டர் என். விஷ்வாபிரியா மற்றும் டாக்டர் ஜி. திருமால் ஆகியோர் முறைகேடாக 81 நபர்களிடம் சிறுநீரக அறுவை சிகிச்சை செய்துள்ளனர் எனவும் இதன் மூலம் சுமார் 3 கோடி ரூபாய் சட்ட விரோத பணப் பரிவர்த்தனை நடைபெற்றுள்ளதாக குற்றம்சாட்டியுள்ளனர்.

இந்த வழக்கு சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 10 ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வருகிறது. இந்த வழக்கில் இருந்து விடுவிக்க கோரி குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பில் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இதனை தொடர்ந்து சென்னை மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்ற நீதிபதி எஸ்.கார்த்திகேயன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது குற்றஞ்சாட்டப்பட்ட மூன்று மருத்துவர்களும் நேரில் ஆஜராகி இருந்தனர்.

அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. பின்னர் வழக்கின் சாட்சி விசாரணை வரும் ஏப்ரல் 8 தேதி தொடங்கும் என தெரிவித்த நீதிபதி விசாரணை அன்றைய தேதிக்கு தள்ளிவைத்தார்.

# அகில இந்திய விவசாய அமைப்பின் சார்பாக விவசாய மற்றும் தொழிலாளர்களுக்கு கடன் மற்றும் மானியம்

அகில இந்திய விவசாய அமைப்பின் சார்பாக விவசாய மற்றும் தொழிலாளர்களுக்கு கடன் மற்றும் மானியம் வழங்காத தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கிளை அனைத்து வங்கிகளும் படித்து முடித்து வேலையில்லாத பட்டதாரிகளுக்கு தொழில் முனைவோர்களுக்கு கல்வி கடன் தொழில் கடன் விவசாய கடன் இவைகள் அனைத்தும் வழங்க வேண்டும் மேலும் இளைஞர்கள் இளம் பெண்களுக்கு மத்திய மாநில அரசு சார்பாக இலவச பயிற்சிகள்



வழங்கி தொழில் முனைகளை உருவாக்கும் நோக்கத்தோடு செயல்பட வேண்டும் எனவே விவசாய மானிய மற்றும் கடன் இவைகள் அனைத்துமே முழுமையாக விவசாயிகளுக்கு பூர்த்தி செய்ய வேண்டும்குக்கிராமங்களில் இருக்கின்ற விவசாயிகளின் நிலை பின்னோக்கி செல்கின்றது அவருடைய வாழ்வாதாரத்தை நோக்கி மத்திய மாநில அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் மேலும் ஆற்று படுக்கையில் தடுப்புச் சுவர்களை அமைத்து நீர்நிலை ஆதாரங்களை வீணடிக்காமல் பாதுகாக்க வேண்டும் என்று தென்னிந்திய ஒருங்கிணைப்பாளர் & தமிழ்நாடு மாநில தலைவர் முத்து கிருஷ்ணன் செய்தியாளர்களை சந்தித்து கூறினார்

# திருத்துறைப்பூண்டிதிருவாரூர் பயணிகளின் 19 ஆண்டு கால கனவு ஏப்ரல் 6தேதி முதல் நிறைவேறுகிறது: ரயில் பயணிகள் மகிழ்ச்சி

திருத்துறைப்பூண்டி, மார்ச். 30

ராமேஸ்வரம் தாம்பரம் புதிய "பாம்பன் விரைவு ரயில்" வருகிற ஏப்ரல் மாதம் 6ஆம் தேதி பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் ராமேஸ்வரத்தில் துவங்கி வைக்கப்படுகிறது. இது குறித்து திருவாரூர் மாவட்ட ரயில் உபயோகிப்பாளர்கள் சங்க மாவட்ட தலைவர் வழக்கறிஞர் நாகராஜன், மாவட்டச் செயலாளர் எடையூர் மணிமாறன் ஆகியோர் தென்னக ரயில்வே பொது மேலாளர் மற்றும் ரயில்வே திருச்சி கோட்ட மேலாளர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது,

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் கடல் நடுவில் 545 கோடி ரூபாய் செலவில் ராமேஸ்வரம் தீவுப் பகுதியினை இணைக்கும் வகையில் இரண்டு கிலோமீட்டர் நீளத்திற்கு புதிய ரயில் பாலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

வருகிற ஏப்ரல் மாதம் 6ஆம்தேதி தேதி ஞாயிற்றுக்கிழமை புதிய பாம்பன் ரயில் பாலத்தை திறந்து வைக்கிறார். புதிய பாம்பன் பாலத்தை ரயில் பயணிகளின் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு அன்றைய தினமே ராமேஸ்வரம் தாம்பரம் இடையே புதிய தினசரி விரைவு ரயிலையும் பாரத பிரதமர் நரேந்திர மோடி நேரடியாக கொடியரசைத்து தொடங்கி வைக்கின்றார்.

திருவாரூர் திருத்துறைப் பூண்டி காரைக்குடி ரயில் பாதையில்( 150 கிலோ மீட்டர்) அகல ரயில்பாதை அமைப்பதற்காக 2006 ஆம் ஆண்டில் இருந்து சென்னைக்கான தினசரி ரயில் சேவை நிறுத்தப்பட்டது.

2019 ஆம் ஆண்டு அகல ரயில் பாதை அமைக்கப்பட்ட பிறகு, தாம்பரம் செங்கோட்டை தாம்பரம் வார மும்முறை விரைவு ரயில் இயக்கப்பட்டு வருகிறது.

ஆனால் இப்பகுதி மக்களின் நீண்ட கால கனவான சென்னைக்கான தினசரி இரவு நேர ரயில் சேவை தொடர்ந்து இயக்கப்படாமல் இருந்து வந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சி தலைவர்கள், ரயில் பயணிகள்சங்கங்கள், வர்த்தக சங்கங்கள் ஆகியோர் வைத்த கோரிக்கையினை ஏற்று இப்போது இந்த ரயில் சேவை தொடங்கி வைக்கப்படுகிறது.

இந்த பாம்பன் விரைவு தினசரி ரயில் சென்னை மற்றும் ராமேஸ்வரம் சென்று வர மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இதனால் இப்பகுதி ரயில் பயணிகள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள்,பொதுமக்கள், வர்த்தகர்கள்,அரசுஅலுவலர்கள், மாற்றுத்திறனாளிகள், மீனவர்கள், விவசாயிகள் சென்னையில் சிகிச்சை பெறும் நோயாளிகள், ரயில் பயணிகள் நல சங்கத்தினர், வர்த்தக சங்கத்தினர் ஆகியோர் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்ட ரயில் உபயப்பாளர் சங்க மாவட்ட தலைவர் வழக்கறிஞர் நாகராஜன் மாவட்டச் செயலாளர் எடையூர் மணிமாறன், ரயில் பயணிகள் சங்க பொறுப்பாளர்கள் ஆசைத்தம்பி, துரைராயப்பன் உள்ளிட்டோர் ராமேஸ்வரம் தாம்பரம் பாம்பன் புதிய விரைவு ரயிலை இயக்க உத்தரவு இட்டதற்காக மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், ரயில்வே வாரிய தலைவர் சதீஷ்குமார், தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர். என். சிங், முதன்மை தலைமை இயக்குதல் மேலாளர் சிவக்குமார், முதன்மை பயணிகள் போக்குவரத்து மேலாளர் சுப்ரமணியம், திருச்சி கோட்ட ரயில்வே மேலாளர் எம் எஸ் .அன்பழகன், முதுநிலை கோட்ட இயக்குதல் மேலாளர் ரதிப்பிரியா, முதுநிலை கோட்ட வர்த்தக மேலாளர் ஜெயந்தி, கோட்ட இயக்குதல் மேலாளர் மா. கவிதா, கோட்ட வர்த்தக மேலாளர் மோகனப்பிரியா ஆகியோருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

மேலும் மீட்டர் கேஜ் காலத்தில் கம்பன் விரைவு ரயில் இயங்கிய நேரத்தில் நின்று சென்ற அறந்தாங்கி, பேராவூரணி, பட்டுக்கோட்டை, அதிராம்பட்டினம், முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி ஆகிய ரயில் நிலையங்களில் பாம்பன் விரைவு ரயில் நின்று செல்லவும், திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, காரைக்குடி ரயில் பாதையை விரைந்து மின்மயமாக்கல் செய்யவும், மின் மயமாக்கல் பணி முடிவுற்றவுடன் தென்னக ரயில்வே துறைக்கு அதிக வருவாய் ஈட்டக்கூடிய ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த இந்த வழித்தடத்தில் உள்ள அனைத்து பயணிகளும் பயன்பெறும் வகையில் ராமேஸ்வரத்திலிருந்து சென்னை வழியாக காசி வாரணாசிக்கு வந்தே பாரத் ரயில் இயக்க வேண்டும் என்று இப்பகுதி ரயில் பயணிகள் மற்றும் பொது மக்களின் சார்பில் கோரிக்கை வைத்துள்ளனர்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

# காஸ் டேங்கர் லாரி ஸ்டிரைக் நீடிப்பு சமையல் காஸ் ஏற்றும் பணி பாதிப்பு: கோரிக்கை நிறைவேறாமல் வாபஸ் பெற மாட்டோம் என அறிவிப்பு

நாமக்கல், மார்ச்.30

தமிழகம் உள்ளிட்ட 6 மாநிலங்களில் 2வது நாளாக காஸ் டேங்கர் லாரிகள் ஸ்டிரைக் நீடிப்பால், சமையல் காஸ் ஏற்றப்படவில்லை. நாடு முழுவதும் சமையல் காஸ் வினியோகம் செய்யும் பணியை ஒன்றிய அரசின் ஐஓசி, பிபிசி, எச்பிசி ஆகிய 3 ஆயில் நிறுவனங்கள் மேற்கொள்கின்றன. நடைமுறையில் உள்ள வாடகை ஒப்பந்தம் ஆகஸ்ட் மாதம் முடிவடைகிறது. இதையொட்டி புதிய வாடகை டெண்டரை ஆயில்நிறுவனங்கள் அறிவித்துள்ளன. இதில் பல்வேறு புதிய விதிமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று முன்தினம் முதல் தென் மண்டலம் முழுவதும் சுமார் 4 ஆயிரம் எல்பிஜி டேங்கர் லாரிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. இதனால் மங்களூர், கொச்சி, விசாகப்பட்டிணம், சென்னை, பாலக்காடு, எரியூர் உள்ளிட்ட 11 எண்ணை சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து கடந்த இரண்டு நாட்களாக காஸ் லோடு ஏற்றாததால் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கோவையில் நேற்று முன்தினம் மாலை ஆயில் நிறுவனங்களின் உயர் அதிகாரிகளுடன் எல்பிஜி டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் நடத்திய பேச்சுவார்த்தையில் சுமூக முடிவு ஏற்படவில்லை. இதனால் நேற்று 2 வது நாளாக காஸ் டேங்கர் லாரிகள் ஸ்டிரைக் நீடித்தது.

இதுகுறித்து நாமக்கல்லை தலைமையிடமாக கொண்டு செயல்படும் தென்மண்டல எல்பிஜி டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கத்தலைவர் சுந்தர்ராஜன் கூறுகையில், ‘கோவையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், ஐஓசி, பிபிசி, எச்பிசி ஆகிய 3 ஆயில் நிறுவனங்களின் செயல் இயக்குனர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் மட்டத்தில் எங்களின் கோரிக்கைகள் ஏற்கப்படவில்லை. ஸ்டிரைக்கை கைவிடுங்கள், பேசலாம் என கூறினார்கள். அதற்கு மறுத்துவிட்டோம். கடந்த 2 நாளில், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களில் இருந்து சுமார் 1200 லாரிகளில் சமையல் காஸ் ஏற்றப்படவில்லை. இதனால் லாரிகள் பிளாண்டுகளின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தென்மாநிலங்களில் 55 இடங்களில் பாட்டிலிங் பிளாண்டுகள் அமைந்துள்ளன. சேலம், கோவை, ஈரோடு, திருச்சி போன்ற பகுதியில் உள்ள பாட்டிலிங் பிளாண்டுகளில் லோடு இறக்கிய நிலையில் சுமார் 1000 லாரிகள் நிறுத்தப்பட்டுள்ளது. ஆயில் நிறுவன அதிகாரிகள் தரப்பில் இருந்து தொடர்ந்து எங்களை தொடர்பு கொண்டு, வேலைநிறுத்தத்தை வாபஸ் பெறும்படி கேட்டுவருகின்றனர். கோரிக்கைகள் நிறைவேறாமல் வேலைநிறுத்தத்தை வாபஸ் பெறும் எண்ணம் இல்லை. குறிப்பாக லோடு ஏற்றி வரும்போது எடை குறைவு ஏற்பட்டால் அபராதம் செலுத்த வேண்டும். கிளீனர் நியமிக்கவேண்டும் போன்ற புதிய விதிமுறைகளை தளர்த்தவேண்டும். சென்னைக்கு நேற்று கப்பலில் கொண்டுவரப்பட்ட, சமையல் காஸை இறக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சமையல் எரிவாயு தட்டுப்பாடு பாதிப்பு உடனடியாக வராவிட்டாலும் இரண்டு, மூன்று நாட்களில் ஏற்படும். ஆயில் நிறுவனங்களுக்கு வேறு விதமான பாதிப்புகள் தற்போது ஏற்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.

# தமிழர்களையும் தமிழ்நாட்டையும் தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் கழக ஒன்றியங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

தமிழர்களையும் தமிழ்நாட்டையும் தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பாஜக அரசை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் கழக ஒன்றியங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திடுமாறு திமுக தலைவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்திய தையடுத்து சிவகங்கை மாவட்ட முழுவதும் உள்ள ஒன்றியக்கழகங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றது.

அந்த வகையில் மாண்புமிகு அமைச்சர் , மாவட்டக்கழக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் சாக்கோட்டை மேற்கு ஒன்றியக்கழகம் சூரக்குடியில் ஒன்றிய செயலாளர் கோட்டையூர் ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் மேனாள் அமைச்சர் தென்னவன், தலைமைப்பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே. எஸ். ரவி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, வர்த்தக அணி ருக்மா சரவணன், சேர்மன் ராதிகா, சேர்மன் கார்த்திக் சோலை உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய , கிளைக்கழக திமுகவினர் திரளாக கலந்து கொண்டனர்.

அதேபோல் திருப்புவனத்தில்மாவட்ட துணைச்செயலாளர் சேர்மன் சேங்கைமாறன் , மேற்கு ஒன்றியக்கழக செயலாளர் வசந்தி சேங்கைமாறன், பேரூர் செயலாளர் நாகூர் கனி ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி மணலூர் கே. எம். பொற்கோ, ஒன்றிய இளைஞரணி தேவதாஸ், அறிவுக்கரசு, துணைத்தலைவர் ரஹமதுல்லா கான், ஆகியோர் முன்னிலை வகித்தனர்..

சேர்மன் சேங்கைமாறன் கண்டன உரை நிகழ்த்தினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அவைத்தலைவர் பொன் இளங்கோவன், மாவட்ட நிர்வாகிகள் சங்கங்குளம் மேனாள் கவுன்சிலர் ஈஷ்வரன், தொழிலதி??பர் திருநாவுக்கரசு, டி ஆர். சேகர், ஆதிதிராவிடர் அகரம் ரவிச்சந்திரன், பூவந்தி மணிகண்டன், புலியூர் ரவி, தேளி கோபால், தொழிலாளரணி பி. பி. சங்கர் , மடப்புரம் மகேந்திரன், தொண்டரணி ராஜா, மீனவரணி அண்ணாமலை, சொட்டதட்டி சக்திமுருகன், பழையனூர் கிளைக்கழக செயலாளர் திருமுருகன், பழையனூர் ஊராட்சி மேனாள் தலைவர், சுப்பிரமணியன், ஊர்க்காவலன், மாரி, மாணவரணி காளிதாஸ், பாண்டியார் கிருஷ்ணன் உள்ளிட்ட இருநூறுக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் மற்றும்நூறுநாள்வேலைத் திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர்...

இளையான்குடி வடக்கு ஒன்றியம் மற்றும் பேரூர்க் கழக திமுக சார்பில் இளையான்குடி பேரூராட்சி அலுவலகம் முன்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சட்டமன்ற மேனாள் உறுப்பினர் வடக்கு ஒன்றிய செயலாளர் சுப. மதியரசன் , பேரூராட்சி தலைவர் பேரூர்க்கழக செயலாளர் நஜ்முதீன் ஆகியோரது தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் பேரூராட்சி துணைத்தலைவர் டி. கே. இபுறாஹீம், தலைமைப்பொதுக்குழு த. உதயகுமார், மாவட்ட நிர்வாகிகள் அண்டக்குடி முருகானந்தம், பாச்சட்டி சேகர், காளிமுத்து, கண்ணமங்கலம் கூட்டுறவு சங்க மேனாள் தலைவர் சுப. தமிழரசன் , மாவட்ட பிரதிநிதிகள் உதயசூரியன், யாஸின் , சாரதி, ஐடி விங் சுப. அன்பரசன் , கி. கண்ணன், மணிமொழியான், அவைத்தலைவர் பெரியசாமி, பொருளாளர் முருகேசன், சிவனேசன், இராஜேந்திரன், தமிழ்செல்வி பாலசுப்பிரமணியன், இளைஞரணி பிரபு, ஐடி விங் ராஜா, மகளிரணி , மஹாலெட்சுமி, பஞ்சவர்ணம், இராஜேஷ்வரி, பேரூர்க்கழக நிர்வாகிகள் ஜெயினுலாபுதீன், காதர் பாஷா, தௌலத், இளைஞரணி பைரோஸ்கான் , கம்பன் காதர், அஜீஸ் கான், இப்றாஹிம் ஷா, கம்பன் காதர், காசிம், பாலமுருகன், இப்றாஹிம், முத்து, அஸ்லாம், முருகேசன், சத்யேந்திரன், தாமஸ், சேகர், இராஜமாணிக்கம் , கண்ணன் நீலமேகம் சந்தானம், சேது, சண்முகம், ராஜகோபால் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அதேபோல் இளையான்குடி தெற்கு ஒன்றியக்கழகத்தில் ஒன்றிய செயலாளர் ஆறு. செல்வராசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முகமது மஹாதீர் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில்மாவட்ட பிரதிநிதி கே ஏ கே.சையது கான் , வ. கணேசன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தனசேகரன், சாலை சாத்தையா, ஐடி விங் ஆரோன் கிங், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு தங்களது கண்டனங்களை பதிவுசெய்தனர்.

இளையான்குடி கிழக்கு ஒன்றியக்கழக திமுக சார்பில், ஒன்றியக்கழக செயலாளர் வே. தமிழ்மாறன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தொண்டரணி புலிக்குட்டி, பொருளாளர் ஆரோக்கிய தாஸ், , பிரதிநிதிகள் கண்ணன், முத்துக்குமார், குருசாமி, கவுன்சிலர் ஜான் போஸ்கோ, ஒன்றிய இளைஞரணி சிவா, மகளிர் தொண்டரணி முனீஷ்வரி, கணேசன், விவசாய அணி கண்டனி பாஸ்கரன் , விளையாட்டு அணி அர்ஜுன் வைலட் பெர்க்மான்ஸ் உள்ளிட்ட திமுகவினர் கலந்து கொண்டு தங்களது கண்ங்களை பதிவுசெய்தனர்.

மானாமதுரை கிழக்கு.

மானாமதுரை கிழக்கு ஒன்றியக்கழக திமுக சார்பில் ஒன்றிய செயலாளர் துரை இராஜாமணி தலைமையில் சட்டமன்ற மேனாள் உறுப்பினர் சேர்மன் எஸ். மாரியப்பன் கென்னடி , தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் அறங்காவலர் ஏஆர். ஜெயமூர்த்தி, குஃஇராஜாங்கம், இடைக்காட்டூர் ஊராட்சி மேனாள் தலைவர் ஆ. மு. சண்முகநாதன் ஆகியோர் முன்னிலையில் நூற்றுக்கும் மேற்பட்ட திமுகவினர் மற்றும் பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்..

இதேபோல் சாக்கோட்டை கிழக்கு ஒன்றியம் புதுவயலில் ஒன்றியக் கழக செயலாளர் சின்னத்துரை, பேரூராட்சி பக்ருதீன் அலி பாய் ஆகியோர் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது..

இந்த ஆர்ப்பாட்டத்தில் பிரம்மையா, முகமது மீரா, சங்கீதா செல்லப்பன், பழனி உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டு ஒன்றிய மோடி பாஜக அரசிற்கெதிரான கண்டனமுழக்கங்களை எழுப்பினர்.

# தமிழகத்தில் சுட்டெரிக்கும் வெப்பம்; 09 மாவட்டங்களில் சதமடித்துள்ள வெப்ப அலை


தமிழகத்தில் அதிகபட்சமாக வேலூரில் 105.62 டிகிரி வெயில் பதிகியுள்ளது.

நேற்றைய நாளில், 100 டிகிரிக்கும் அதிகமாக வெயில் பதிவான இடங்கள் பின்வருமாறு;

வேலூர் 105.62 டிகிரி (40.9 செல்சியஸ்), சேலம் 103.28 டிகிரி (39.6 செல்சியஸ்) , கரூர் 103.1 டிகிரி (39.5 செல்சியஸ்), ஈரோடு 102.56 டிகிரி (39.2 செல்சியஸ்), மதுரை விமான நிலையம் 101.84 டிகிரி (38.8 செல்சியஸ்) , திருச்சி 101.48 டிகிரி (38.6 செல்சியஸ்), திருத்தணி 101.3 டிகிரி (38.5 செல்சியஸ்),

திருப்பத்தூர்100.4டிகிரி (38 செல்சியஸ்), தர்மபுரி 100.4 டிகிரி (38 செல்சியஸ்).

# 2026ல் கோவையில் 10 தொகுதியிலும் திமுக கூட்டணி. அடித்து சொல்லும் அமைச்சர் செந்தில் பாலாஜி



கோவையில் உள்ள அனைத்து தொகுதிகளையும் திமுக கூட்டணி வெல்ல வேண்டும் என அமைச்சர் செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

கோவையில் திமுக சார்பில் இப்தார் ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மின்சாரத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி பங்கேற்றார். மேலும் இந்நிகழ்ச்சியில் திமுக மாவட்டச் செயலாளர்கள் மற்றும் 500க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செந்தில் பாலாஜி; 234 தொகுதிகளுக்கும் சமமான வளர்ச்சியை தரக்கூடிய அளவில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

பொதுவாக அரசியல் தலைவர்கள் நமக்கு ஓட்டு போட்டு வெற்றி பெற வைத்தவர்களுக்கு முதலில் நல்லது செய்யவேண்டும் என நினைப்பார்கள். ஆனால் முதலமைச்சர் ஸ்டாலின் அப்படி இல்லை. எல்லோருக்கும் எல்லாம் என்ற எண்ணத்தில் செயல்பட்டு வருகிறார். கோவையில் உள்ள 10 தொகுதிகளையும் திமுக கூட்டணி வெற்றி பெற வேண்டும். 234 தொகுதிகளுக்கும் தானே சட்டப்பேரவை உறுப்பினராக செயல்படுகிறார் முதலமைச்சர் ஸ்டாலின்.

கோவையில் தார் சாலை அமைக்க வேண்டும் என கோரிக்கை வைத்தவுடன் ஏறத்தாழ ரூ.430 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தார் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. போட்டித் தேர்வுக்கு தயாராகும் நபர்களுக்கு 7மாடி நூலகம் அமைக்கப்பட்டு வருகிறது. வரும் ஜனவரி மாதம் அந்த நூலகத்தை முதலமைச்சர் திறந்து வைக்க உள்ளார் என்றார்.

# உலக நீர் தினத்தை பள்ளி மாணவர்களுடன் கொண்டாடிய ஜே.எம்.ஜே மீடியா




ஜே.எம்.ஜே மீடியாவின் அனுசரணையுடன், உலக நீர்தினத்தினைமுன்னிட்டு நீரின் அவசியம், நீரின் சேமிப்பு, மற்றும் நீரின் பாதுகாப்பு தொடர்பாக மேலாண்மை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, வள்ளிப்பட்டு, ஆலங்காய ஒன்றியம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

உலகின் மிக முக்கியமான தினங்களை, உலகம் முழுவதும் உள்ள நமது ஒருங்கிணைப்பாளர்களின் உதவியுடனும் , பங்கேற்புடனும், ஜே.எம்.ஜே மீடியா நிறுவனம் கொண்டாடி வருகிறது. அந்த வகையில், கடந்த மார்ச் 22ஆம் தேதி சர்வதேச நீர் தினம் என்பதால் , உலகத்திற்கு அருட்கொடையாக வழங்கப்பட்டுள்ள நீரின் முக்கியத்துவம், அதை பாதுகாத்து எதிர்கால உலகிற்கு எவ்வாறு வழங்குவது என்பதைக் குறிக்கும் விழிப்புணர்வு நிகழ்வு, ஜே.எம்.ஜே மீடியாவின் நிறுவன பணிப்பாளர் ஜஸீரா ஜலீலின் தலைமையில் நடைப்பெற்றது.

இந்நிகழ்வில் மேலாண்மை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, வள்ளிப்பட்டு, ஆலங்காய ஒன்றியம் , வாணியம்பாடி , திருப்பத்தூர் மாவட்டம் மாணவர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர். மேலும், அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. சிவஞானம் (M.A., B.Ed.) "நீர் சேமிப்பு" பற்றியும், உதவி ஆசிரியர் பெருமக்கள் திருமதி கு. கோமகள், மு. சரஸ்வதி, மற்றும் ஆசிரியர்கள் திரு. வெ. ரமேஷ், திரு. ரா. அண்ணாமலை, திருமதி மா. அருள்மொழி ஆகியோர் நீர் நிலைகளை பாதுகாப்பது, நீரின் அசுத்தம், நீரினை சேமித்தல் ஆகியவற்றைப் பற்றியும் மாணவர்களுக்கு விளக்கிக் கூறியது குறிப்பிடத்தக்கது.

# திருப்புவனம் பறையன்குளம் பள்ளியில் தமிழக அரசு பள்ளிக்கல்வித்துறை சார்பாக பள்ளி ஆண்டு விழா: லதாதேவி, பால்பாண்டி, சுப்புலெட்சுமி, மரியஜெஸிந்தா பங்கேற்பு




சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகேயுள்ள மு. பறையன்கேளம் திருப்புவனம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மு. பறையங்குளம் கிராமத்தில் தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை சார்பாக பள்ளி ஆண்டு விழா நடைபெற்றது.

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை மரிய ஜெஸிந்தா தலைமையில் நடைபெற்ற இந்த ஆண்டு விழா நிகழ்ச்சியானது பள்ளி மாணவர்களது பல்வேறு கலைநிகழ்ச்சிகளோடு நடைபெற்ற இந்த விழாவில் வட்டார கல்வி அலுவலர்கள் லதாதேவி, பால்பாண்டி, வட்டார வளமைய பயிற்றுனர் சுப்புலெட்சுமி, ஆசிரியர் இராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்..

சிறப்பாக நடைபெற்ற இந்த ஆண்டுவிழாவில் பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள், ஊர்பொது மக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

# மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கும்பாபிஷேக விழா ஏற்பாடுகள் தீவிரம்



கோவை மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஏப்ரல் 4ஆம் தேதி கும்பாபிஷேக விழா நடைபெறவுள்ள நிலையில், அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோவை மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஏப்ரல் 4ஆம் தேதி கும்பாபிஷேக விழா நடைபெற உள்ளது. இதற்கான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி, தான்தோன்றி விநாயகா் சன்னதி, மயில் மண்டபம், இடும்பன் சன்னதி, மூலவா் சன்னதி, பரிவார தெய்வங்களின் சன்னதி, ராஜகோபுரம், பாம்பாட்டி சித்தா் முன் மண்டபம், ஆதி மூலஸ்தானம் சன்னதி மற்றும் மலைக்கோயில் நுழைவாயில் என அனைத்து இடங்களிலும் வா்ணம் பூசும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது.

விழாவுக்காக யாகசாலைகள் அமைக்கும் பணிகள் முடிவுற்றுள்ளன. கோயில் முகப்பில் ரூ. 1.60 கோடி மதிப்பில்வசந்தமண்டபம் பணிகள் நிறைவுற்று, அலங்காரம் மற்றும் வா்ணம் பூசும் பணிநடைபெற்று வருகிறது. கும்பாபிஷேகத்தைக் காண முந்தைய நாள் இரவில் இருந்து பக்தா் வருகை அதிக அளவில் இருக்கும் என்பதால், அவா்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்வது, பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள், போலீஸாருடன் கோயில் நிா்வாகத் தரப்பினா் ஆலோசித்து வருகின்றனா்.

# பகுதி நேர ஆசிரியர்களுக்கு பணி நிலைப்பு வழங்க வேண்டும் ராமதாஸ்

சென்னை, மார்ச்.30

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கை : தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறையில் 13 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி வரும் பகுதிநேர ஆசிரியர்கள், தங்களுக்கு பணி நிலைப்பு வழங்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு தனித்தனியாக கோரிக்கை மனுக்களை அனுப்பியிருந்த நிலையில், அவை அனைத்தும் தள்ளுபடி செய்யப்படுவதாகவும், அவர்களுக்கு பணி நிலைப்புவழங்கமுடியாது என்றும் தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

பகுதி நேர ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கையைக்கூட ஏற்க தமிழக அரசு மறுப்பது நியாயமற்றதாகும். எனவே, தமிழக அரசு இந்த கோரிக்கையை கனிவுடன் ஆய்வு செய்து பகுதி நேர ஆசிரியர்களை பணி நிலைப்பு செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பைக்குகள் மோதல் ஏட்டு பரிதாப பலி



கூடங்குளம், மார்ச்.30

நெல்லை மாவட்டம் நாங்குநேரி அருகே மறுகால்குறிச்சியை சேர்ந்தவர் முத்தையா (42). இவர் கூடங்குளம் போலீஸ் நிலையத்தில் ஏட்டாக பணியாற்றி வந்தார். நேற்று காலை பைக்கில் பணிக்கு சென்று கொண்டிருந்தார். காலை 8 மணியளவில் கூடங்குளம் மேற்கு பைபாஸ் சாலையில் சென்றபோது, அணுமின் நிலையத்தில் பணி முடிந்து வந்த ஒப்பந்த ஊழியரான பெனிட் (25) என்பவரின் பைக் மீது நேருக்கு நேர் மோதியது. இதில் தலையில் படுகாயம் அடைந்த முத்தையா, நாகர்கோவில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். காயமடைந்த பெனிட் ராதாபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவருகிறார்.

# தேனி | காவலரை கல்லால் அடித்து கொலை செய்த நபரை சுட்டுப் பிடித்த கம்பம் போலீசார்



உசிலம்பட்டி அருகே போலீஸ்காரரைகொலை செய்த கொலைக் குற்றவாளியை, கம்பம்அருகே போலீசார்துப்பாக்கியால் சுட்டுப் பிடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள கள்ளப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் முத்துக்குமார். இவர், உசிலம்பட்டி காவல் நிலைய ஆய்வாளரின் வாகன ஓட்டுநராக பணி புரிந்து வந்தார்.

இந்நிலையில், இவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு சிந்துபட்டி டாஸ்மாக் அருகே நாவர்பட்டியைச் சேர்ந்த கஞ்சா வியாபாரி பொன்வண்ணன் என்பவரால் அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

இதையடுத்து கொலைக் குற்றவாளியான பொன்வண்ணனை போலீசார் தீவிரமாக தேடி வந்தனர். இந்நிலையில், இன்று பொன்வண்ணன் தேனி மாவட்டம் கம்பம் நகரில் இருந்து கம்பம் மெட்டு செல்லும் தேசிய நெடுஞ்சாலை வழியாக கேரளாவிற்கு தப்பிச் செல்ல இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது. தகவலைத் தொடர்ந்து தீவிர ரோந்து பணியில் ஈடுபட்ட போலீசார், பொன்வண்ணனை தீவிரமாக தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அப்போது, போலீசாரை பார்த்த பொன்வண்ணன் கம்பம்மெட்டு அடிவாரத்தில் உள்ள தனியார் பள்ளியின் அருகே தப்பிச் செல்ல முயற்சி செய்ததாகவும், அவரை போலீசார் துப்பாக்கியால் சுட்டுப் பிடிக்க முயன்றுள்ளனர்.

அதில், சுந்தர பாண்டி என்ற போலீசார் மற்றும் கொலைக் குற்றவாளி பொன்வண்ணன் ஆகியோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதையடுத்து தாக்குதலில் படுகாயம் அடைந்த பொன்வண்ணன் மற்றும் சுந்தரபாண்டி என்ற போலீஸ்காரர் ஆகிய இருவருக்கும் கம்பம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது இதில் பொன்வண்ணன் இறந்ததாக கூறப்படுகிறது.

இதைத் தொடர்ந்து மேல் சிகிச்சைக்காக தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

போலீஸ்காரரை கல்லால் தாக்கி கொலை செய்த குற்றவாளியை போலீசார்சுட்டுப்பிடித்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# 10ம் வகுப்பு தேர்வு எழுதிய தந்தை, மகன்




தமிழகத்தில் பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு நேற்று தொடங்கியது. விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை அருகே மண்டபசாலை, கிராமத்தை சேர்ந்தவர் செந்தில்குமார் (45). இவர் தற்போது சிலுக்கப்பட்டியில் கிராம உதவியாளராக இருந்து வருகிறார். இவரது மகன் கவின்குமார், அருப்புக்கோட்டையில் உள்ள தனியார் பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வருகிறார். 10ம் வகுப்பை நிறைவு செய்ய விரும்பிய செந்தில்குமார், தனது மகனுடன் தேர்வுக்கு தயாராகி வந்தார். நேற்று செந்தில்குமார் தேவாங்கர் மேல்நிலைப்பள்ளியில் தனித்தேர்வராக தேர்வு எழுதினார். இதேபோல் தான் படிக்கும் தனியார் பள்ளியில் கவின்குமார் தேர்வு எழுதினார். மகனுடன் தந்தையும் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதியதை பலரும் பாராட்டினர்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
30.3.2025

## கடலில் விடப்பட்ட 189 அரியவகை ஆலிவ் ரெட்லி ஆமைக் குஞ்சுகள்



நாகப்பட்டினம், மார்ச்.30

வேதாரண்யம் வனத்துறையினரால் சேகரிக்கப்பட்டு ஆலிவ் ரெட்லி குஞ்சுகள் பொறிப்பகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இந்த அரிய வகை ஆமை முட்டைகளில் இருந்து வெளிவந்த குஞ்சுகள் பத்திரமாக கடலில் விடப்பட்டன.

## தமிழ்நாட்டில் 100 நாள் வேலைத் திட்டத்துக்கான ஊதியம் ரூ.17 உயர்ந்து ரூ.336ஆக நிர்ணயம்!!

சென்னை, மார்ச்.30

தமிழ்நாட்டில் 100 நாள் வேலைத் திட்டத்துக்கான ஊதியம் ரூ.17 உயர்த்தப்பட்டுள்ளது.

2025, 26 நிதியாண்டுக்கான ஊதியம் ரூ.336ஆக நிர்ணயம் செய்து ஒன்றிய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. 2024 25 நிதியாண்டில் 100 நாள் வேலை திட்டத்தில் ஊதியமாக ரூ.319 வழங்கப்பட்டு வந்தது.

## கோவையில் சிறுத்தையை பிடிக்க வனத்துறை நடவடிக்கை



கோவை, மார்ச்.30

கோவை மதுக்கரை அடுத்த முருகன்பதி அருகே, தோட்டத்தில் இருந்த ஆட்டை வேட்டையாடிய சிறுத்தையை பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குமிட்டிபதி, சுற்றுவட்டார பகுதிகளில் ஆடு, வளர்ப்பு நாய்களை சிறுத்தை தொடர்ந்து வேட்டையாடி வருகிறது.

சிறுத்தை நடமாட்டம் அதிகரித்துள்ளதால், வனத்துறையின் அங்கு கூண்டு வைத்து கண்காணித்து வருகின்றனர்

## அமைச்சர் தகவல் ஜூன் மாதத்தில் புதிய மின் பேருந்துகள்



சென்னை, மார்ச்.30

சட்டசபையில் கேள்வி நேரத்தின் போது திருவிகநகர் எம்எல்ஏ தாயகம் கவி (திமுக) கேள்விக்குபதில்அளித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பேசுகையில், “தமிழ்நாடு முதல்வர் புதிதாக மின் பேருந்துகளை வாங்கி, சென்னையிலே இயக்குவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

அந்தப் பேருந்துகள் முதல்வரின் பொற்கரங்களால் ஜூன் மாத துவக்கத்திலே துவக்கி வைக்கப்பட இருக்கிறது. அந்தப் பேருந்துகள் பயன்பாட்டிற்கு வரும்பொழுது சட்டப்பேரவை உறுப்பினர் தாயகம் கவி கோரிய திரு.வி.க. நகர் பகுதியிலிருந்து மற்ற பகுதிகளுக்கும், சென்னையின் முக்கிய பகுதிகளுக்கும் தேவையான பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

## சென்னையில் பைக் ரேஸில் ஈடுபட்ட 35 வாகனங்கள் பறிமுதல்



சென்னை, மார்ச்.30

சென்னை அண்ணா சாலை மற்றும் அண்ணா நகர் பகுதிகளில் பைக் ரேஸில் ஈடுபட்ட 35 வாகனங்கள் பறிமுதல் செய்தனர். சென்னை அண்ணா சாலையில் விடிய விடிய இளைஞர்கள் பைக் ரேஸில் ஈடுபட்டனர்

காவல்துறையினரின் கட்டுப்பாட்டை மீறி மீண்டும் பைக் ரேஸ், சிசிடிவியில் சிக்காமல் இருக்க நம்பர் பிளேட்டுகளை மறைத்து இளைஞர்கள் சாகசத்தில் ஈடுபட்டனர். காவல்துறையினர் அண்ணாசாலை, ஸ்பென்சர் சிக்னல், ஜிபி ரோடு, மெரினா காமராஜர் சாலை போன்ற பல்வேறு பகுதிகளில் தடுப்புகள் அமைத்து தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். இளைஞர்கள் நம்பர் பிளேட்டுகளில் துணி வைத்து மறைத்தும் நம்பர் பிளேட்டுகளை சுழற்றி வைத்தும் சாமர்த்தியமாக பைக் ரேஸ்களில் ஈடுபட்டதா போலீசார் தெரிவித்தனர்

சென்னையில் உள்ள மெரினா கடற்கரை, அடையாறு போன்ற சாலைகளில் இளைஞர்கள் பைக் ரேஸ் மற்றும் வீலிங் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். அதீத வேகத்தில் பைக்கில் செல்லும் போது நிகழும் விபத்துகளால் உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. பைக் ரேஸில் ஈடுபடும் இளைஞர் மட்டுமின்றி எதிரில் வரும் வாகன ஓட்டிகளும் இந்த விபத்தில் சிக்கி மரணமடையும் சம்பவங்களும் அரங்கேறி வருகிறது. இதன் காரணமாக பைக் ரேசில் ஈடுபடுவோர் மீது காவல் துறையினர் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுத்ததையடுத்து பைக் ரேஸ் சம்பவங்கள் குறைந்தது

ஆனால் சமீப காலமாக பைக் ரேசில் ஈடுபடுவது குறித்து அடிக்கடி எச்சரிக்கை விடுத்தும், இளைஞர்கள் தொடர்ந்து பைக் ரேசில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்நிலையில் சென்னை அண்ணா சாலையில் நேற்று நள்ளிரவு 1 .30 மணி அளவில் இளைஞர்கள் பைக் ரேசில் ஈடுபட்டனர்.

இதனை காவல் துறையின் வாகன தணிக்கையின் போது கண்டனர். இதனையடுத்து கட்டுப்பாடுகளை மீறி அதிவேகமாக வாகனங்களை ஓட்டிய இளைஞர்களிடமிருந்து 35 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்தனர்.

## 1930ல் தொடங்கிய இந்தி திணிப்பு எதிர்ப்பு போரை முதல்வர் நிச்சயம் முடித்து வைப்பார்; துணை முதல்வர் உதயநிதி பேச்சு



சென்னை, மார்ச்.30

தமிழக சட்டப்பேரவையில் நேற்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை மானிய கோரிக்கையின் மீது பதில் அளித்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின்பேசியதாவது: பதவிக்காக அரசியலுக்கு வந்தவர் அல்ல, நம்முடைய முதல்வர். தமிழக முதல்வருக்கு கிடைத்த முதல் பதவியே மிசா சிறைவாசம். இந்தியாவினுடைய ஜனநாயகத்தை காக்க 50 ஆண்டுகளுக்கு முன்பு தன்னுடைய அரசியல் பயணத்தை தொடங்கிய நம்முடைய முதல்வர் இன்றைக்கும் இந்தியாவுடைய ஜனநாயகத்தைகாக்கின்ற களத்தில் நிற்கின்றார்.

1930ம் ஆண்டு பெரியார் இந்தி எதிர்ப்பு போரை தொடங்கி வைத்தார். 1960ம் ஆண்டு அண்ணா தலைமையில் மாணவர்கள் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை முன் நின்று நடத்தினார்கள். தமிழ்க்காக தண்டவாளத்தில் தலையை வைத்த கலைஞர் ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான இந்திதிணிப்பை என்றும் எதிர்ப்போம் என்று முழங்கினார்.

1930ல் தொடங்கிய அந்த இந்தி திணிப்பு எதிர்ப்பு போரை, நம்முடைய முதல்வர் காலத்தில் நிச்சயம் முடித்து வைப்பார். முதல்வர் தலைமையில் ‘‘தமிழ்நாடு வெல்லும் தமிழ்நாடு போராடும்’’. இவ்வாறு துணை முதல்வர் பேசினார்.

## சர்தார் 2 படம் : யுவன் சங்கர் ராஜாவிற்கு பதில் இவரா?



கடந்த 2022ம் ஆண்டு, கார்த்தியின் நடிப்பில் வெளியான படம் 'சர்தார்'. இப்படத்தை பி.எஸ்.மித்ரன் இயக்கினார். தேசத்துரோகி என்று முத்திரை குத்தப்பட்ட உளவாளி, உண்மையில் தேசநலனுக்காக எத்தகைய தியாகங்களைச் செய்கிறார் என்பதே படத்தின் கதை. இதில் அப்பா மகன் என இரட்டை வேடத்தில் நடித்திருந்தார் கார்த்தி.

அதைத்தொடர்ந்து பி.எஸ். மித்ரன், கார்த்தி கூட்டணியில் சர்தார் 2 திரைப்படம் தற்போது உருவாகி வருகிறது. இதில் எஸ் ஜே சூர்யா, மாளவிகா மோகனன், ஆஷிகா ரங்கநாத், ரஜிஷாவிஜயன்உள்ளிட்டபலரும்முக்கியகதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்திற்கு ஜார்ஜ் வில்லியம்ஸ் ஒளிப்பதிவு செய்ய, விஜய் படத்தொகுப்பு பணிகளை மேற்கொள்கிறார்.

மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் விறுவிறுப்பாக படப்பிடிப்புகள்பணிகள்நடைபெற்றுவருகிறது.இப்படம்வருகிறஜூலைமாதம்வெளியாகும்எனஎதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் இப்படம் குறித்த புதிய தகவல் வெளியாகி உள்ளது. அதாவது, முதலில் இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசையமைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தார். ஆனால், தற்போது அவர் நீக்கப்பட்டு, அவருக்கு பதிலாக சாம் சி.எஸ் பணிபுரிந்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. முதல் பாகத்துக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைப்பாளராக பணிபுரிந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஜி.வி.பிரகாஷின் “பிளாக்மெயில்” பர்ஸ்ட் லுக் வெளியீடு

தமிழ் சினிமாவின் முன்னணி இசையமைப்பாளர்களில் ஒருவரான ஜி.வி.பிரகாஷ் குமார் தொடர்ந்து பல்வேறு மொழிகளில் பெரிய படங்களுக்கு இசையமைத்து வருகிறார். நிறைய ஹிட் பாடல்களையும் கொடுத்து வருகிறார். இசையில் மட்டுமல்லாது நடிப்பிலும் கவனம் செலுத்தி வருகிறார் ஜி.வி.பிரகாஷ். இட்லி கடை, குட் பேட் அக்லி மற்றும் எஸ்.கே.25 என ஏகப்பட்ட படங்களை கைவசம் வைத்துள்ளார். சமீபத்தில் வெளியான ஜி. வி. பிரகாஷின் 25வது படமான 'கிங்ஸ்டன்' கலவையான விமர்சனத்தை பெற்றது.

பிளாக்மெயில் என்ற படத்தில் ஜி.வி.பிரகாஷ் நடித்துள்ளார். இப்படத்தை இரவுக்கு ஆயிரம் கண்கள், கண்ணை நம்பாதே ஆகிய படங்களை இயக்கிய மு.மாறன் இயக்குகிறார். இந்தப் படத்தின் கதாநாயகியாக தேஜு அஸ்வினி நடித்துள்ளார். இந்த படத்தில் ஸ்ரீகாந்த் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். மேலும், நடிகர்கள் பிந்து மாதவி, வேட்டை முத்துக்குமார், ரெடின் கிங்ஸ்லி, ரமேஷ் திலக், ஹரி பிரியா ஆகியோரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்நிலையில் மு.மாறன் இயக்கத்தில் ஜி.வி.பிரகாஷ் நடிக்கும் "பிளாக்மெயில்" திரைப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை விஜய் சேதுபதி மற்றும் ரவி மோகன் இணைந்து தங்களது எக்ஸ் தளத்தில் வெளியிட்டனர். சாம் சி.எஸ் இசையில் உருவாகும் இத்திரைப்படம் வரும் மே மாதத்தில் வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. விரைவில் படத்தின் டீசர், டிரெய்லர் குறித்த அறிவிப்பு அடுத்தடுத்து வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வீர தீர சூரன் 2 படத்தின் 2 நாள் வசூல் விவரம்




சித்தா பட இயக்குனர் எஸ்.யு.அருண்குமார் இயக்கத்தில் விக்ரம் நடித்துள்ள படம் 'வீர தீர சூரன் 2'. இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சராமுடு, துஷாரா விஜயன், சித்திக் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படத்தில் நடிகர் விக்ரம் கிராமிய தோற்றத்தில் 'காளி' என்ற கேங்ஸ்டர் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படத்திற்கு ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இப்படம் மதுரையை கதைக்களமாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. 'வீர தீர சூரன் 2' படம் பல தடைகளை தாண்டி நேற்றுமுன்தினம் வெளியாகி மக்கள்மத்தியில்நல்லவரவேற்பைபெற்றுவருகிறது.

இப்படம் முதல் நாளில் மட்டும் ரூ 3.25 கோடிவசூலித்துள்ளது. இந்த நிலையில் இப்படம் இரண்டு நாளில் செய்துள்ள வசூல் குறித்த விவரம் வெளியாகி உள்ளது. அதன்படி இப்படம் 2 நாட்களில் ரூ.10 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளது. அடுத்தடுத்து விடுமுறை தினங்கள் என்பதால் இப்படத்தின் வசூல் மேல் அதிகமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஐபிஎல் கிரிக்கெட்: சென்னை ராஜஸ்தான் அணிகள் இன்று மோதல்



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) இரண்டு ஆட்டங்கள் நடைபெறுகின்றன. இதில் கவுகாத்தியில் இரவு 7.30 மணிக்கு அரங்கேறும் 11வது லீக் ஆட்டத்தில் 5 முறை சாம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ், முன்னாள் சாம்பியனான ராஜஸ்தான் ராயல்சை சந்திக்கிறது.

கடந்த ஆட்டத்தில் ஏற்பட்ட சறுக்கலை மறந்து நல்ல நிலைக்கு திரும்ப சென்னை அணி தீவிரம் காட்டும். அதேநேரத்தில் முதல் 2 ஆட்டங்களில் கண்ட தோல்வியால் துவண்டு போய் இருக்கும் ராஜஸ்தான் அணி எழுச்சி பெற்று வெற்றி கணக்கை தொடங்க எல்லா வகையிலும் முயற்சிக்கும். எனவே இந்த ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு குறைவு இருக்காது.

இவ்விரு அணிகளும் இதுவரை 29 முறை மோதி இருக்கின்றன. இதில் சென்னை 16 ஆட்டத்திலும், ராஜஸ்தான் 13 ஆட்டத்திலும் வெற்றி பெற்று இருக்கின்றன. கடைசியாக நடந்த 5 ஆட்டங்களில் 4ல் ராஜஸ்தான் வென்றுள்ளது நினைவுகூரத்தக்கது.

முன்னதாக மாலை 3.30 மணிக்கு விசாகப்பட்டினத்தில் நடைபெறும் ஆட்டத்தில் டெல்லி கேப்பிட்டல்ஸ், முன்னாள் சாம்பியனான ஐதராபாத் சன் ரைசர்சை சந்திக்கிறது.

ஐதராபாத் அணியின் அதிரடியை தடுப்பதை பொறுத்தே டெல்லி அணியின் வெற்றி வாய்ப்பு அமையும். இவ்விரு அணிகளும் இதுவரை 24 முறை நேருக்கு நேர் சந்தித்துள்ளன. இதில் 13ல் ஐதராபாத்தும், 11ல் டெல்லியும் வெற்றி கண்டுள்ளன. இந்த போட்டிகளை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனல் நேரடி ஒளிபரப்பு செய்கிறது.

## மும்பையை வீழ்த்தி குஜராத் அபார வெற்றி



ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் இன்று நடைபெற்ற 9வது லீக் ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதின.

இப்போட்டியில் டாஸ் வென்ற மும்பை முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து, குஜராத் அணியின் தொடக்க வீரர்களாக சாய் சுதர்ஷன், கேப்டன் சுப்மன் கில் களமிறங்கினர். இருவரும் அதிரடியாக ஆடி அணிக்கு சிறப்பான தொடக்கம் அளித்தனர். 27 பந்துகளில் 38 ரன்கள் விளாசிய சுப்மன் கில் கேட்ச் மூலம் அவுட் ஆனார். அடுத்து வந்த ஜோஸ் பட்லருடன் ஜோடி சேர்ந்த சாய் சுதர்ஷன் தொடர்ந்து அதிரடியாக ஆடினர். அவர் அரைசதம் விளாசினார்.

அதேவேளை, 24 பந்துகளில் 39 ரன்கள் குவித்த பட்லர் கேட்ச் மூலம் அவுட் ஆனார். அடுத்து வந்த ஷாருக்கான் 9 ரன்னில் அவுட் ஆனார். சிறப்பாக ஆடிய சாய் சுதர்ஷன் 41 பந்துகளில் 63 ரன்கள் விளாசி அவுட் ஆனார். பின்னர் வந்த வீரர்கள் அடுத்தடுத்து தங்கள் விக்கெட்டுகளை இழந்து வெளியேறினர். இறுதியில் குஜராத் 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 196 ரன்கள் குவித்தது. மும்பை தரப்பில் கேப்டன் ஹர்திக் பாண்ட்யா அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து 197 ரன்கள் குவித்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் களமிறங்கிய மும்பை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்திருந்தது. முதல் ஓவரிலேயே தொடக்க வீரர் ரோகித் சர்மா 8 ரன்கள் எடுத்த நிலையில் அவுட் ஆனார். மற்றொரு தொடக்க வீரரான ரிக்கெல்டன் 6 ரன்னில் அவுட் ஆனார். அடுத்து வந்த திலக் வர்மா, சூர்யகுமார் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 36 பந்துகளில் 39 ரன்கள் எடுத்த திலக் வர்மா கேட்ச் மூலம் அவுட் ஆனார். அடுத்துவந்த ராபின் மின்ஸ் 3 ரன்னில் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார்.

அதிரடியாக ஆடிய சூர்யகுமார் 28 பந்துகளில் 48 ரன்கள் குவித்து அவுட் ஆனார். கேப்டன் ஹர்திக் பாண்ட்யா 11 ரன்னில் அவுட் ஆனார். இறுதியில் மும்பை அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 160 ரன்கள் மட்டுமே எடுத்தது. சாண்ட்னர், நமன் தலா 18 ரன்களுடன் களத்தில் இருந்தனர்.

இதன் மூலம் மும்பை இந்தியன்சை 36 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி குஜராத் டைட்டன்ஸ் அபார வெற்றிபெற்றது. சிறப்பாக பந்து வீசிய குஜராத் அணியின் பிரசித் கிருஷ்ணா, முகமது சிராஜ் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.